WLC15-1-2-TA

# தேவன் இருக்கிறாரா?: தேவன் இருக்கிறார் என்பதை பற்றிய விவாதம் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** அறிவிப்பாளர் : இன்றைய ஜான் அங்கேர்பெர்க் நிகழ்ச்சியில், தேவன் இருக்கிறாரா? சமீபத்திய ஆய்வறிக்கையின்படி அமெரிக்கர்களில் ஐந்தில் ஒருவர் தன்னை நாத்திகனாக, இறைநம்பிக்கை அற்றவராக ஒன்றிலும் பங்கில்லாதவராக கருதுவதாக கூறப்படுகிறது. இன்றைக்கும் தத்துவ மேதையாகிய Dr. வில்லியம் லேன் கிரேகிடம் தேவன் இருக்கிறார் என்று சொல்வதற்கு ஆதாரமான ஐந்த சிறந்த காரணங்களை எடுத்து சொல்லும்படியாக கேட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த கேள்விகளுக்கு பதிலளிக்க இருக்கும் எனது விருந்தினர் ஆராய்ச்சி நிபுணர் தத்துவ மேதை Dr. வில்லியம் லேன் கிரேக் பலரும் அவரை தங்கள் தலைமுறையின் முன்னணி கிறிஸ்தவ சித்தாந்த மேதை என்று கருதுகின்றனர், உலகம் முழுவதிலும் உள்ள பிரசித்திபெற்ற பல்கலைகழகங்களில் நடக்கும் நாத்திகர்களுடனான விவாதங்களில் பங்குபெறுபவர். Dr. கிரேக் இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைகழகத்தில் தத்துவ பாடபிரிவில் Ph. D பட்டம் பெற்றவர்;

மேலும் முனிக் பல்கலைகழகத்தில் இறையிலில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான்தான் ஜான் அன்கேர்பேர்க். இன்றைக்கு நிகழ்ச்சியை பார்ப்பதற்கு நன்றி. நீங்க இங்க இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் இந்த தகவல்களை தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன். எனது விருந்தினரான Dr. வில்லியம் லேன் கிரேக் நம்முடைய காலத்தின் சிறந்த சிந்தாந்த மேதை. இவர் இன்றைக்கு உலகில் மிகவும் பிரசித்திபெற்ற பல்கலைகழகங்களில் உலகின் நன்கு அறிமுகமான நத்திகர்களோடு உரையாடலிலும் விவாதங்களிலும் பங்குபெற்று வருகிறார். நீங்க, பில், எங்களோடு இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய பெரும்பாலான விவாதங்களில் முன்னிலை நாத்திகர்களோடுதான் விவாதித்த தலைப்புகள் இதுதான்: நாத்திகம் வர்சஸ் கிறிஸ்தவம், தேவன் இருக்கிறாரா, தேவன் இருக்கிறார் என்பதை நம்புவதற்கு இருக்கிற ஆதாரம் என்ன. இன்றைக்கு தேவன் இருக்கிறார் என்பதை நம்புவதற்கான அந்த ஐந்து காரணங்களை பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:..நல்லதுதான்.எனக்கு தெளிவாக இருக்கும், ஜான், தேவன் இருக்கிறார் என்பதை விளக்கிடும் கூற்று

மனிதர்களுடைய வாழ்க்கையை பற்றி விரிவான விளக்கம் அளிக்கிறது. உதாரணமாக: இந்த பிரபஞ்சத்தின் துவக்கத்தை பற்றி விளக்கமாக சொல்கிற ஒரே நபர் தேவன்தான். இரண்டாவதாக, நுண்ணறிவுடைய ஜீவ ராசிகளை பற்றி விளக்கமாக சொல்லக்கூடிய ஒரே நபர் தேவன் தான். மூன்றாவதாக, இந்த உலகத்தில் சிறந்த நீதிநெறிகளையும் கடைமைகளையும் உண்டாக்கி அமைத்தவர் தேவன் மட்டுமே. நான்காவதாக, நசரேயனாகிய இயேசுவை பற்றிய வரலாற்று ஆதாரங்களை விளக்கி சொல்லும் சிறந்த நபர் தேவன் ஒருவரே. இறுதியாக, ஐந்தாவதாக, தேவனை தனிப்பட்ட விதத்தில் அறிந்து அனுபவிக்க முடியும். இவை அனைத்தையும் சேர்த்து பார்த்தால் தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசிக்க தேவையான தகவல்கள் கிடைக்குமென நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், முதலாவது காரணத்தை பார்க்கலாம். இந்த பிரபஞ்சத்தின் துவக்கம்.

**கிரேக்**:.நவீன கால இயற்பியலில் காணப்படும் தவிர்க்க முடியாத உண்மை என்னவென்றால், அது கடந்த கால விஞ்ஞானிகளின் கருத்திற்கு எதிராக இருக்கிறது, நவீன கால அறிவியலின்படி இந்த பிரபஞ்சமானது நித்தியமாக இருக்கும் ஒன்றல்ல அது சில குறிப்பிட்ட வருடங்களுக்கு முன்புதான் ஆரம்பமானது என்கின்றனர். நவீன இயற்பியலின் கட்டுப்பாட்டு உதாரணங்களின்படி, இது பிரபஞ்சத்தை

குறித்த பாடப்பிரிவு, அவர்களுடைய கருத்துபடி இப்பிரபஞ்சத்தம் பிக் பேங் என்ற நிகழ்வின் வழியாக பதினான்கும் பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என்கின்றனர்.

என்னுடைய கருத்துப்படி பெரும்பாலானவர்கள் இந்த கொள்கையின் படியான புரிந்துகொள்ளுதல் இல்லாமல் இருக்கிறார்கள், எல்லாமே ஏதோ தானாய் தோன்றிடவில்லை, ஆனால் பிக் பேங் நிகழ்வின் போதுதான் விண்வெளியில் காணப்படும் அனைத்தும்  காலமும் அப்போதுதான் ஆரம்பமாகியிருக்கும். எனவே இந்த பிக் பேங் தான் ஒன்றுமில்லாததிலிருந்து உலகம் தோன்ற காரணமாக இருந்திருக்கிறது என தெரிகிறது. சரி, இதில் கடினமானது, என்னவென்றால், ஒன்றுமே இல்லை, வெறுமையிலிருந்து உருவாகியிருக்கிறது. அதாவது இந்த பிரபஞ்சம் ஒன்றும் இல்லாத நிலையில் இருந்து துளிர்த்தது போல இருந்தால், அது வித்தையிலும் மோசமாக இருக்கும். ஒரு வித்தைக்காரன் ஒரு தொபிக்குள் இருந்து ஒரு முயலை எடுக்கிறான் குறைந்த பட்சம் அவனிடம் ஒரு தொப்பியாவது இருக்கிறது. ஆனா நாத்திகர்களின் கருத்து என்னவென்றால் இந்த பிரபஞ்சமானது ஒன்றுமில்லாத நிலையில் இருந்து உருவாகியிருக்கிறது, வெறுமையிலிருந்து தோன்றியது, இது அர்த்தமற்ற ஒன்றாக இருக்கிறது. இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கியது இதுதான் என்று அவர்கள் சொல்லும் கருத்துக்கள் சிறந்த காரணமாக தெரியவில்லை.

**ஆன்கர்பெர்க்:** நீங்க சொல்கிற காரியத்திற்கு ஒரு சிறந்த உதாரணத்தை பலூனை வைத்து சொல்லியிருக்கிறீர்கள்.

**கிரேக்**:.முக்கியமாக புரிந்துகொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால் இந்த பிக் பேங் வடிவில், காணப்படுகிற யாவும் ஏற்க்கனவே இருந்த வெற்றிடத்தில் உண்டாகியிருக்கிறது என்று சொல்லப்படுவது சரியான ஒன்றல்ல. மாறாக, இந்த விதத்தை பொறுத்தவரை, பிக் பேங் நிகழ்வின் போது காலமும் விண்வெளியும் தானாக வந்தது என்கிறது. இதை கற்பனை செய்து பார்க்க சிறந்த வழி என்னவென்றால் ஒரு பலூனை அதை மீது சில பட்டங்கள் ஒட்டப்பட்டிருப்பதை போல யோசித்து பாருங்கள். சரி, இந்த பட்டங்கள் எல்லாம் ஒட்டப்பட்டிருக்கிறது, அதனால அவை பலூன் மீது அங்குமிங்கும் போக முடியாது. ஆனா நீங்க அந்த பல்லூனை ஊதும்போது, அந்த பட்டங்கள் எல்லாம் ஆங்காங்கே தூரதூரமாக இருப்பது போல இருக்கும் ஏன்னா பல்லூன் விரிவடைகிறது. அந்த பலூனின் மேற்ப்புரம் நமது விண்வெளியின் முப்பரிமாணம் போல இருக்கும். விண்வெளி விரிவடையயும்போது, எல்லா விண்மீன் திரள்களும் ஆங்காங்கே இருப்பதுபோல பரந்திருக்கிறது. இது யதார்த்தமான விஷயம் போல இருக்கிறது காலத்தின் விருவாக்கத்தை பற்றி பார்க்கும்போது, அவை அனைத்தும் அருகாமையில் தான் இருந்திருக்கிறது, கடந்த காலத்தில் ஒரு கட்டம் வரைக்கும், முழு

பிரபஞ்சமும் சுருங்கிய தன்மையோடு ஒரு புள்ளி அளவில் தான் இருந்திருக்கும் என்று சொல்லப்படுகிறது. அதனால இந்த சமகால அண்டவியளின்படி ஒன்றும் இல்லத்தில் இருந்துதான் பதினான்கு பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றியது என்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அநேக ஜனங்கள் வலைதளங்களில் பார்க்கிறார்கள் சிலர் விஞ்ஞான புத்தகங்களை வாசித்து அதிலிருந்து தெரிந்துகொள்கிறார்கள் சில நாவல்கள், இசைந்து இருப்பதை குறித்து அதில் அறிவியல் தத்துவமேதைகள் குறிப்பிடுகிறார்கள், ஏன்னா உண்மையில், ஒன்றுமேயில்லை என்பதற்கு மாறாக, இந்த வெற்றிடதில் ஏதோ இருக்கிறது. ஆனா அந்த கொள்கையில் சொல்லப்படுவது இது கிடையாது, அதை விளக்கிடுங்கள்.

கிரேக்:.இப்பிரபஞ்சத்தின் துவக்கத்தை பற்றிய விஷயத்தில் அளவுத் தன்மை பற்றி தவறான தகவல்களை தொலைக்காட்சி நிகழ்சிகளிலும் பிரசித்திபெற்ற செய்திதாள்களிலும் வெளிவந்தது பிரச்சனையாக இருந்தது. அதாவது குவாண்டம் மேக்கானிக்ஸ் முறையில் வெறுமையாக இருக்கும் நிலையில் இருந்து ஏதோவொரு பொருள் உருவாக வாய்ப்பிருக்கிறதாக கூறப்படுகிறது, ஆகவே ஒன்றும் இல்லாத நிலையில் இருந்து ஒரு காரியம் உருவாவது சாத்தியமாகும். அதனாலதான் ஒன்றுமில்லாத வெற்றிடத்தில் இருந்து இந்த பிரபஞ்சம் உருவாகியிருக்கிறது என்று கூறுகிறார்கள். இந்த இயற்பியலாளர்கள்

சொல்ல மறந்த காரியம் என்னவென்றால் இந்த வெறுமையான இடம் வெற்றிடமாக இருக்கவில்லை. ஒன்றுமில்லாத வெற்றிடம் என்று நினைப்பது போல அது இல்லை. அந்த வெற்றிடம் என்று சொல்வது ஆற்றல் நிறைந்த இடம், அதி பயங்கர ஆற்றல் கொண்டது, அது இயற்பியல் விதிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதனால தான் பிரபஞ்சத்தின் ஆதி நிலைகளில், முதல் ஏற்ப்பட்ட பிளவு மற்றும் இரண்டாவது நிலை நிலைபெற்றது, இவை அனைத்தும் குவாண்டம் மெக்கானிக்கல் வெற்றிடத்தை விவரிக்கிறது, அதாவது இந்த பிரபஞ்சம் ஒன்றுமில்லாததில் துவங்கவில்லை என்று கூறுகிறது. அதாவது இந்த வெற்றிடத்தை கொண்டிருக்கும் நிலையை அடைவது தற்செயலாக தோன்றிடாது என்கின்றனர். அதற்கு ஒரு துவக்கம் இருக்கிறது. ஆகவே தான் இந்த பிரபஞ்சத்தின் துவக்கம் எப்படி உண்டானது என்ற கேள்விக்குள் தள்ளப்படுகிறோம். இந்த பிரபஞ்சத்தை நிலைபடுத்தியது என்னது?

**ஆன்கர்பெர்க்:** தேவன் இருக்கிறார் என்பதற்கு இது ஏன் சரியான காரணமாக இருக்கிறது?

**கிரேக்**:.சரி, இந்த பிரபஞ்சத்தின் தன்மை ஏதோ ஒரு மருரூபத்தினால் உண்டானது என்று சொல்ல முடியுமா. இதில் காணப்படுகிற காரணிகள் அனைத்தும் உருவாக என்ன நடந்திருக்கும், இதை பற்றி சொல்கிற பல இயற்பியல் காரணங்கள் கூட தளர்வை கண்டிருக்கிறது. உதாரணமாக:

இது தேவை அற்ற ஒன்றாக உருவாகியிருக்கலாம் என்பார்கள். அது ஒருவேளை பௌதீக மற்றதாக காரணிகள் அற்றதாக காணப்படலாம் ஏன்னா பிரபஞ்சம் அனைத்து காரணிகளால் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அது தற்காளிகமற்றதாக இருக்கிறது, அது காலங்களுக்கு அப்பாற்பட்டது, ஏன்னா அது காலத்தையும் விண்வெளியையும் உண்டாக்கியிருக்க்ரியது; அதனால அது மாற்றமில்லாத ஒன்றாக இருக்கும். அதாவது இந்த பிரபஞ்சத்தை உருவாக்கும் சக்தியை உடைய மிகவும் வல்லமை உடையதாக இருக்கணும். சரி, அதுமட்டுமல்ல, இது தனிப்பட்ட நிலையை குறிக்கிறது என்ற விவாதத்தையும் நான் முன்வைத்திருக்கிறேன். எதற்காக அப்படி செய்கிறேன்? சரி, ஏன்னா அதிலிருந்துதான் அதாவது நித்தியமாக இருக்கும் ஒருகாரியத்தின் நிரந்தரமான துவக்கத்தை உடைய காலங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருந்து தற்காலிகமானவைகளை விவரிக்க முடியும். அதன் காரனை ஒருவேளை ஒரு நபருடைய இடைபாடு இல்லாத இயந்திரங்கள் ஆனது என்றால், போதுமான அளவு செயல்படும் ஆற்றலை அளித்திட்டால், அதனுடைய பிரதிபலன் தானாக வெளிவந்திடும். அந்த நிலை ஆதி முதலாய் நிரந்தரமாக இருக்கிறதென்றால், அதன் தாக்கமும் ஆற்றலும் என்றென்றைக்குமாய் நிரந்தரமாக இருந்திடும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, தண்ணீர் உறைந்து போகிற ஒரு உதாரணத்தை வைத்திருக்கிறீர்கள்.

**கிரேக்**:.சரி, உதாரணத்திற்கு, தண்ணீரை எடுத்திடலாம். தண்ணீர் உறைவதற்கு காரணம் வெப்ப நிலை சீரோ டிகிரீ செல்சியஸ் கீழ் இருப்பதுதான். ஆதி முதலாய் வெப்ப நிலை சீரோ டிகிரிக்கு கீழ இருந்திருந்தால், ஆதி முதலாக தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து நிற்கும். ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தண்ணீரை உறைய செய்வது என்பது சாத்தியமாகாது. அப்படின்னா ஆதிமுதலாக இருக்கும் நிரந்தரமான நிலையில் இருந்து எப்படி தற்காலிகமான சில தாக்கங்களை பெற முடியும்? அதற்கு என்னிடம் ஒரே ஒரு பதில் தான் இருக்கிறது, அதற்கு ஒரு தனி நபரின் இடைபாடு அவசியம், தன்னிச்சையாக செயல்படும் ஆற்றல் கொண்ட ஒருவர், அவர்தான் எந்த வித முன்னிலை தன்மைகளும் இல்லாமல் புதிய ஆற்றலுடன் உருவாக்க முடியும். உதாரணமாக, ஆதிமுதலாக உட்க்கார்ந்திருப்பவர் சுய சித்தப்படி எழுந்து நிற்கவும்  முடியும். ஆதிமுதலாக இருக்கும் காரியங்களில் இருந்து புதிதாக ஒன்றை உண்டாக்க முடியும். அதனால நாம் அனைவரும் பிரபஞ்சத்தின் மாறுதல்கள் மூலம் உண்டாகாமல், தனிப்பட்ட சிருஷ்டிகரால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** இது அருமையான விஷயம், பில், தேவன் இருக்கிறார் என்பதற்கான இரண்டாவது காரணத்தை பார்க்க விரும்புகிறேன். இந்த பிரபஞ்சத்தில் காணப்படுகிற அமைப்புகள்

அனைத்தும் நுண்ணறிவுடைய வடிவமைப்பாளரை குறிக்கிறது என்கிறீர்கள். விளக்கிடுங்கள்.

கிரேக்:.விஞ்ஞானிகள் ஒரு காலத்தில் பிரபஞ்சத்தின் துவக்கத்தின் நிலை எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம், ஆனால் காலப்போக்கில் சிற அதிர்ஷ்டத்தின் மூலம், நுண்ணறிவுடைய ஆற்றல் நம்மை போன்றவர்களை உருவாக்கியது என்று நினைத்தார்கள். ஆனா மாறாக, கடந்த ஐம்பது வருடங்களில், விஞ்ஞானிகள் தங்களை ஆச்சரியப்படுத்தும் விதமாக இந்த பூமியில் வாழ்கிற நுண்ணறிவுடைய அனைத்தும் இப்போது இருப்பதற்கு காரணம் ஆதி நிலையில் உண்டான சமநிளைகளின் தாக்கம் என்பதை கண்டறிந்திருக்கிறார்கள். அதாவது, இந்த பிரபஞ்சம் ஆனது உண்டாக்கப்ப்படும்போதே இதில் வாழப்போகிற நுண்ணறிவாற்றல் மூலம் உண்டாக்கப்பட்ட ஜீவ ராசிகளுக்கு ஏற்றார் போல உண்டாக்கப்பட்டிருக்கிறது. இந்த நுண்ணறிவுடைய ஆற்றல் எல்லா புத்திக்கும் மேலான ஒன்றாக இருக்கிறது. இந்த நேர்த்தியான வடிவமைப்பை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமா, இது எப்படி இருந்திருக்கும் என்று உங்களுக்கு எண்கள் மூலம் சொல்கிறேன் கவனியுங்க: இந்த பிரபஞ்சத்தின் மொத்த வரலாற்றில் இருக்கும் நொடிகளின் எண்ணிக்கை, பிக் பாங் நாட்களில் இருந்து, அது 10 பவர் பதினெட்டு, இப் பிரபஞ்சத்தின் வரலாற்றின் மொத்த நாழிகையின் கணக்கு டென் டு த பவர் ஏய்டீன் - பத்துக்கு பின்னால பதினெட்டு சைபர் - பெரிய எண் தானே. இந்த பிரபஞ்சத்தில்

நமக்கு தெரிந்த அளவிலுள்ள கோள்களை பார்க்கும்போது அதில் இருக்கும் காரணிகளின் எண்ணிக்கை டென் டு த பவர் எய்ட்டி $10^{80}$

சரி இந்த எண்களை மனதில் கொண்டபடியே, இதை யோசித்து பாருங்கள்: இந்த பிரபஞ்சத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு, புவி ஈர்ப்பு விசையின் தன்மையும் சில வேதுப்பொருட்களின் தன்மையும் சரியான விகிதத்தில் ஒன்றிணைத்து செயல் பட வேண்டும் அதன் தோராயமான பங்கு $10^{100}$. இந்த பிரபஞ்சத்தின் விரிவாக்கத்திற்கு ஏற்றார் போல இயங்கும்படி செயல்பட வைக்கும் கட்டுப்பாட்டை குறிக்கும் வடிவமைப்பின் பாகம் $10^{120}$ பாகத்தில் ஒன்று. இது உண்மையில் பெரிய விழிப்புணர்வு; ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தை சேர்ந்து ரோஜர் பென்ரோஸ் கூறுகிறார் அதாவது இந்த பூவுலகத்தின் ஆதிநிலையின் தன்மைகளை கண்டறிய முற்பட்டால் அதை அறிந்துகொள்ளும் சாத்திய கூறின் சதவிகிதம் டென் டு த பவர் ஆப் ஒன் இஸ்டு டென் பவர் டென் (நூற்றி இருபத்தி மூன்று) $1:10^{10(123)}$, இந்த எண்ணிக்கையை எப்படி கணக்கிட்டு சொல்வதென்றே தெரியவில்லை வின்னியலின் படி இது புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கிறது.

நேரத்தான வடிவமைப்பிற்குரிய உதாரணங்களை தரவேண்டுமானால் அது அதிகமாக இருக்கும் சொல்லப்போனால் இனி வரும் நவீன இயற்பியல் கூற்றில் காணப்படாமல் போகும் என்ற நிலை இருக்காது. இந்த நேர்த்தியான வடிவமைப்பை பற்றி சொல்ல அதின் தன்மையை

விளக்கி சொல்ல வேண்டியது அவசியம். இந்த பாடத்தி பற்றிய இலக்கியங்களில், இதை விளக்கிடும் சாத்தியமான விளக்கங்கள் மூன்றினை முன்மொழிந்திருக்கிறார்கள். ஒன்று இயற்கையின் அவசியமாக கருதப்படுகிறது - அதாவது இயற்கையின் விதிகளால் உண்டாகிறது; அதற்கு தேவையான தரம் அதில் கானபப்டவேண்டும். இரண்டாவது அது தனித்து நிற்பதாக இருக்க வேண்டும். மூன்றாவது அது நுண்ணறிவுடைய ஆற்றலின் வடிவமைப்பாக இருக்கவேண்டும். ஜீவனம் பண்ண ஏற்ற விதத்தில் யாரோ இந்த பிரபஞ்சத்தை வடிவமைத்திருக்கிறார்கள்.

பிரச்சனை என்னவென்றால் இந்த முதல் இரண்டு விளக்கங்களும், இயற்கையின் அவசியம் மற்றும் தேவை, இது வெறும் புறத்தோற்றமான காரியங்கள் அல்ல. அதாவது இந்த காரியங்களுக்கு இருக்கும் தன்மையை இயற்கையின் விதிகள் தான் அளிக்கிறது தரத்தை உண்டாக்குகிறது என்று சொல்லமுடியாது. மேலும் அதனுடைய வாய்ப்புகள் அனைத்தும் இதை ஏற்றுகொள்ளலாம் என்று சொல்வதற்கு ஏற்ப்புடையதாக இருக்காது. அதனால இதுல முக்கியமான விளக்கம் நுண்ணறிவுடைய படைப்பாற்றல் தான் என நினைக்கிறன். பல அறிவியல் ஞானிகளும் இதைதான் சொல்கிறார்கள். உதாரணமாக, பால் டேவிஸ், முன்னிலை இயற்பியலாளர், சொல்லியிருக்கிறார், “என்னுடைய விஞ்ஞான ஆய்வுகளின் மூலம் நான் அறிந்துகொண்ட விஷயம் என்னென்றால் இந்த பிரபஞ்சத்தின்

அமைப்பு வடிவமைக்கப்பட்டிருக்கும் விதம் உண்மையிலேயே அபூர்வமாக இருக்கிறது அவை ஏதோ தானாக உண்டாயிற்று என்பதை என்னால் ஏற்றுகொள்ள முடியாது." மேலும் ராபர்ட் ஜேஸ்ட்ரோ, விண் கல்வியின் நாசா காட்டர்ட் கழகத்தின் தலைவராவார், அவர் சொல்கிறார் "அறிவியல் வரலாற்றில் இதுவரை தேவன் இருக்கிறார் என்பதை நிருபிக்கும் ஆதாரங்களில் இது மிகவும் வலிமை வாய்ந்ததாக இருக்கிறது."

அதனால இப்ப சொன்ன காரியங்களை சுருக்கமாக பார்த்திடலாம்:

1). இந்த பிரபஞ்சம் நிலை நிற்கிறது என்றால், நிச்சயம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம் இருக்கிறது.

2). இந்த பிரபஞ்சம் நிலையாக இருக்கிறது.

3). ஆகவே இந்த பிரபஞ்சத்திற்கு நிச்சயம் ஒரு ஆரம்பம் இருக்கிறது.

இரண்டாவது சொல்லப்பட்ட காரியங்களை சுருக்கமாக சொன்னால்:

1). இந்த பிரபஞ்சம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருப்பதற்கு காரணம் இயற்கையின் நிலை அவசியம் மற்றும் வடிவமைப்பு என்றிடலாம்.

2) அது வெறும் இயற்கையின் நிலை அவசியம் என்பது அல்ல.

3) முக்கியமானது, நுண்ணறிவுடைய வடிவமைப்பு

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், தேவன் இருக்கிறார் என்பதற்கு மூன்றாவது காரணம் இந்த உலகில் இருக்கும் நிலையான நீதி நெறிகள் என்று சொல்கிறீர்கள், விளக்கி சொல்லுங்க.

**கிரேக்**:.தேவன் இல்லை என்று சொல்வோமானால், ஜான், நம்மால ஒரு நடுநிலையை பார்க்கவே முடியாது எது சரி எது தவறு, எது நல்லது எது கெட்டதுன்னு தெரியாது. நாத்திகத்தில், நீதிநெறிகள் எல்லாமே உயிரியல் பரிமானத்தால் சமூக நிலைகளால் உண்டாயிற்று என்கின்றனர். மைக்கேல் ருசி, கேனடாவை சேர்ந்த அறிவியலின் நாத்திக சித்தாந்த வாதி, உயிரியலின் அடுத்த நிலை அழியாமை என்று சொல்கிறார். நன்னெறிகள் பிரம்மையாம், நன்னேர்கள் எல்லாம் வாழ்வதற்கும் பெருக்கத்திற்கும் உதவுகிற ஒரு காரணி அதின் ஆழ்ந்த கருத்துகள் எல்லாம் பிரம்மை என்கிறார். அதாவது இயற்க்கை நாத்திககண்ணோட்டத்தில், அதாவது, இந்த உலகத்தில் எந்த நீதியான அறநெறிகள் இல்லை என்கின்றனர். ஆனால் உண்மையில் நீதியாக நடக்கும் அனுபவத்தில் அந்த தளத்தின் நீதியான தரத்தையும் கட்டாயங்களையும் கடைபிடிப்பது மிகப்பெரிய சவாலாக காணப்படும் என்பது மறுக்க முடியாத் உண்மை. ரூஸ் கூட இன்னொரு இடத்தில் இரண்டு கூட்டல் இரண்டு ஐந்து என்று சொல்வது எப்படி தவறாக இருக்கிறதோ அதேபோல சிறு பிள்ளைகளை பலாத்காரம் செய்வதும் நீதியின் படி ஒப்புகொள்ள முடியாது என்று ஒருவர் சொன்னதை அவர்

ஏற்றுகொள்கிறார். இப்ப கேள்வி என்னவென்றால், இந்த நீதிநெரியான முறைக்கும் தரத்திற்கும் அடிப்படையாக இருப்பது எது? அதற்கான பதில் தேவன் என்று நினைக்கிறேன். தேவன் இருக்கிறார் என்றால், சரி தவறு நல்லது கேட்டது என்பதன்  வித்தியாசம் அடித்தளம் தெளிவாக இருக்கும், நாத்திகத்தினால் அதை எடுத்துரைக்க முடியாது.

இந்த மூன்றாவது கூற்றையும் சுருக்கமாக சொன்னால்:

1) தேவன் இல்லை என்றால், நீதியான நெறிகளும் கடமைகளும் இருக்காது.

2) ஆனா, நீதிநெரியான முறைகளும் சட்டங்களும் இருக்கிறது, அதிலிருந்துதான் சட்ட ரீதியான அத்தியாவசிய காரியங்கள் நடக்கிறது.

3) அப்படியென்றால், தேவன் இருக்கிறார்.

தேவன் இருக்கிறார் என்பதை விளக்கிடும் வலிமையான விவாதம் இதுதான் என்று நினைக்கிறன், ஏன்னா மாணவர்கள் அனைவரும் இதிலிருக்கும் உண்மையை நிச்சயம் விளங்கிகொள்வார்கள். அவர்களுடைய பல்கலைகழக பாடங்களில் ஒப்புமைவாதத்தை  பற்றி போதிக்கப்படுகிறார்கள். அதாவது தேவன் இல்லை என்று சொன்னால் எல்லாமே ஒன்றாக இருக்கும் என்று போதிக்கப்பட்டிருக்கிரார்கள். அதில் நீதிநெறிகளுக்கு இடமே இல்லை. ஆனால் அதே சமயத்தில், ஜான், இரண்டு காரியங்களை அவர்கள் ஆழ்ந்து கவனிக்கிறார்கள் - நீதிநெறிகள் இருக்கிறது என்று ஒப்புகொள்கிறார்கள். அதை

நியாயாந்தீர்க்கப்ப்டும் நிலையை பற்றி போதிக்கப்படுவதை விரும்பாவிட்டாலும். பொறுமை திறந்த மனப்பான்மை அன்பை அவர்கள் மதித்து வலியுறுத்துகிறார்கள். அவர்களோடு இசைந்து போகாமல் இருப்பதால் மரண தண்டனைக்கு தள்ளப்படுவதை கண்டு அஞ்சுகிறார்கள். அவர்கள் நீதியின் தரத்தை கைகொள்கிறார்கள். எனவே, உண்மையில், அவர்கள் உண்மையின் இரண்டு காரியங்களையும் புரிந்துகொள்கிறார்கள், ஆனால் இரண்டையும் ஒன்றோடு ஒன்று இணைத்து அதிலிருந்து வரும் யதார்த்த நிலையை காண தவறுகிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், பில், தேவன் இருக்கிறார் என்பதற்கான ஐந்தாவது காரணம் இயேசுவின் வாழ்க்கை மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலை பற்றிய வரலாற்று உண்மைகள் என்கிறீர்கள். விளக்கிடுங்கள்.

**கிரேக்**:.சரி, எல்லா நிலையிலும் பார்க்கும்போது நசரேயனாகிய இயேசு தனித்து நிற்கிறார், ஜான். புதிய ஏற்ப்பட்டு வரலாற்று அறிஞர்கள் ஒரு நிலையை அடைந்திருக்கிறார்கள் அதாவது வரலாற்றில் இயேசு தோன்றியபோது ஒரு தெய்வீக அதிகாரத்தோடு செயல்படுகிறவராக இருந்தார், தேவனுடைய ஸ்தானத்தில் நின்று பேசக்கூடிய அதிகாரம். அவர் மூலமாக தேவ ராஜ்யம் மனிதர்களுக்குள் வந்தது என்று அவரே கூறியிருக்கிறார். இந்த உண்மையின் நிரூபணம் கண்கூடாக

காணப்பட்டிருக்கிறது, அவருடைய ஊழியம் அற்புத அடையாளங்களை கொண்டதாக இருந்தது. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தம்மை பற்றி கூறிய மரணத்திலிருந்து உயிர்த்தெழும் காரியம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இயேசு உண்மையில் மரணத்திலிருந்து உயிர்த்திருந்தால் அவர் தம்மை பற்றி சொன்னது அனைத்தும் உண்மைதானே, அவர் சொன்னதை தேவன் அப்படியே செய்து நிரூபித்தார். இப்ப, பெரும்பாலானோர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்பது ஒரு நம்பிக்கையாக இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனா, இதை பற்றி முனிச் பல்கலைகழகத்தில் டாக்டர் பட்டம் படிக்கும் போது, நா ஆச்சரியப்பட்டு பார்த்த காரியம் என்னவென்றால் உண்மையிலேயே இன்றைய முன்னணி புதிய ஏற்ப்பட்டு வேத பண்டிதர்கள் இயேசு உயிர்த்தெழுந்தார் என்பதை நிருபிக்கும் நான்கு ஆதாரங்களை கொடுத்திருக்கிறார்கள் இது சிறந்த விளக்கமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** அவை என்ன என்ன?

**கிரேக்**:.அதில் முதலாவதாக அவருடைய சிலுவை மரணத்திற்கு பிறகு நடந்த; அடக்கம் பண்ணப்படுதல் இயேசு யூத சங்கத்தில் இருந்த அரிமத்தியனான யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டார். இரண்டாவதாக, சிலுவை மரணத்திற்கு பிறகு வந்த ஞாயிற்று கிழமை கால இயேசுவை பின்பற்றி சகோதரிகள் அவரை வைத்திருந்த

கல்லறை காலியாக இருப்பதை கண்டனர். மூன்றாவதாக, அதற்கு பிறகு சிலர் தனிநபர்களாகவும் வெவ்வேறு இடங்களில் குழுவாகவும் கூட்டமாக பலரும் பல நிலைகளில், மரணத்தில் இருந்து உயிர்த்த இயேசுவை உயிரோடு பார்த்தனர். மேலும் நான்காவதாக, மற்ற மாறுபட்ட எல்லா கருத்துக்கலுக்கும் மேலாக, அவருடைய சீஷர்களே திடீரென்று தைரியம் கொண்டு தேவன் இயேசுவை மரணத்திலிருந்து உயிர்தெழ செய்தார் என்று விசுவாசித்தனர். சரி, இந்த காரியங்கள் அனைத்தும் இன்றைய புதிய ஏற்பாட்டு வரலாற்றறிஞர்களால் அங்கீகரிக்கப்படுகிறது. கேள்வி என்னவென்றால், இதை எப்படி சிறப்பாக விளக்க முடியும்? இந்த நான்கு உண்மைகளையும் விளக்கி சொல்லும் சிறந்த நபராக நான் யாரை கருதுகிறேன் என்றால், இயேசுவை உயிரோடு எழுப்பின தேவன் தான் உண்மையாக பார்த்த சாட்சி.

லூக் ஜான்சன், எமோரி பல்கலைகழகத்தின் புதிய ஏற்ப்பாட்டு வேத பண்டிதர், இப்படியாக எழுதுகிறார், “ஆதிகால கிறிஸ்தவர்கள் தீவிரமாக செயல்பாடு ஏதோவொரு விதமான மருரூபமாக்கும் அனுபவத்தை பெற்றிருக்க வேண்டும் என்கிறார்.” மேலும் N. T. ரைட், சிறந்த பிரிட்டிஷ் பண்டிதர் சொல்லும்போது, இவ்விதமாக கூறுகிறார், “இயேசு மறுபடியும் உயிர்த்தெழுந்ததாலும் அவரை வைத்திருந்த கல்லறை காலியாக இருப்பதாலுமே ஒரு வரலாற்று வல்லுனராக என்னால் ஆதி

கிறிஸ்தவர்களின் துவக்கத்தை பற்றி விளக்கி சொல்ல முடியவில்லை.”

இந்த காரியங்களை சுருக்கமாக சொல்ல வேண்டுமானால்:

1. நசரேயனாகிய இயேசுவை பற்றி நான்கு மறுக்க முடியாத உண்மைகள் உள்ளது - சிறந்தமுறையில் அடக்கம் பண்ணப்பட்டார், அவருடைய கல்லறை காலியாக உள்ளது, உயிர்த்த பிறகு தரிசனமானார், இயேசுவின் உயிர்த்தெழுதலில் சீஷர்களுக்கு உண்டான விசுவாசம்.
2. தேவன் இயேசுவை உயிரோசு எழுப்பினார் என்பதே இந்த உண்மைகளின் விளக்கங்கள் வலியுறுத்துகிறது.
3. தேவன் இயேசுவை உயிரோடு எழுப்பினார் என்ற உண்மை தேவன் இருப்பதை வலியுறுத்துகிறது.
4. அப்படியென்றால் தேவன் இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், பில், தேவன் இருக்கிறார் என்பதை ஜனங்கள் நம்புவதற்கு  ஐந்தாவது காரணம் தனிப்பட்ட விதத்தில் தேவனை அனுபவிப்பது என்கிறீர்கள். அதற்கு அர்த்தம் என்ன?

**கிரேக்**:.இந்த ஐந்தாவது காரணம் தேவன் இருக்கிறார் என்பதற்கான விவாத கருத்து அல்ல. மாறாக விவாதங்களுக்கு அப்பாற்பட்டு தேவன்

இருக்கிறார் என்பதை முழுமையாக அறிந்து உணர்ந்திட செய்கிற காரியம், அதுதான் அவருடனான உங்கள் தனிப்பட்ட உறவு. இந்த விதத்தில் தான் வேதாகம மக்கள் தேவனை அறிந்துகொண்டனர். பேராசிரியர் ஜான் கிக் சொன்னது போல, அவர்களுக்கு தேவன் ஏதோ மனதில் தோன்றிய கற்பனை பாத்திரமல்ல, ஆனா அவர்களுடைய வாழ்க்கையில் அர்த்தத்தை கொடுத்து அவர்களுடைய அனுபவத்தோடு கலந்திட்ட ஒரு நபர். சரி, இது உண்மை என்று சொன்னால், நிச்சயம் தேவன் இருக்கிறாரா என்பதை பற்றிய விவாதம் நம்மை தேவன் பக்கமாக நடத்தாமல் விலகி செல்லும் ஆபத்தை உண்டாக்கும். தேவன் நம்முடைய இருதயத்தில் இடைபடுவதை கவனித்து செவிகொடுக்க முடியாத அளவிற்கு இந்த விவாதத்தில் கவனம் செலுத்த கூடாது. இதை கேட்க்கிரவர்களுக்கு சொல்லுகிறேன், தேவன் அவர்களுடைய வாழ்வில் தனிப்பட்டவிதத்தில் உறவாடினார். வேதம் சொல்கிறது, “தேவனிடம் கிட்டி சேருங்கள் அவர் உங்களிடம் கிட்டி சேர்ந்திடுவார்.” ஆகவே வெறும் விவாதங்களையே நாம் கவனித்து கொண்டு இருக்ககூடாது, நாம் தேவனிடம் நெருங்கி வந்து அவருடைய முகத்தை தேட வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** இதுவரைக்கும் இதை கவனத்தில் எடுக்காமல் இருந்தவர்கள் இப்போது இதை பற்றி சிந்திக்க துவங்கியவர்களுக்கு, நீங்க என்ன ஆலோசனை தர விரும்புகிறீர்கள்?

கிரேக்:.இந்த செய்தியை நான் முதன் முதலில் கேட்ட போது என்ன செய்தேனோ அதையே அவர்களும் செய்ய உற்சாகப்படுத்துகிறேன். முதலில், நா ஜெபிக்க விரும்புகிறேன். இரவு நேரத்தில் அவர்கள் தங்கள் படுக்கையின் அருகில் முழங்கால் படியிட்டு ஜெபிக்க ஊக்குவிக்கிறேன் தேவனிடம் பேசனும், “தேவனே, நீ இருக்கிறீர்கள் என்றால், எனக்கு உம்மை வெளிபடுத்தும். நீர் இருக்கிறீர் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன், என்று சொல்லி ஜெபத்தில் ஊக்கமாக ஈடுபட வேண்டும். இரண்டாவதாக, அவர்கள் புதிய ஏற்பாட்டின் ஒரு பிரதியை பெற்றுக்கொண்டு சுவிஷேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் இயேசுவின் வாழ்க்கையை பற்றி வாசிக்க வேண்டும். சுவிஷேஷங்களில் இயேசுவின் வாழ்க்கையை பற்றி வாசிக்கும்போது, உங்களையே கேட்டுகொல்லுங்கள்” இந்த மனிதன் யார்? அவர் தம்மை குறித்து சொல்வதை உறுதியாக சொல்கிறாரா? அவர் உண்மையிலேயே என்னுடைய பாவங்களுக்காக மரித்து தேவனுடனான என்னுடைய உறவை மறுபடியும் புதுப்பித்திட வழிவகுத்திட மனித ரூபத்தில் வந்த தேவனா? இந்த பாதையை ஜனங்கள் பின்பற்றினால் நிச்சயமாக சொல்வேன், இந்த பாதை என்னை நடத்தியது போல அவர்களையும் தேவன் பக்கமாக நடத்தி அவரை காணும்படி செய்திடும்.

சரி, தேவன் இருக்கிறார் என்பதையும் அவர் இயேசுவை மரணத்திலிருந்து உயிர்த்தெழ செய்து தன்னை யார் என்றும்

இயேசுவில்  தம்மை வெளிப்படுத்திறார் என்பதையும் விசுவாசிக்கிற நிலையை அடைந்தவர்களாக நிற்பவர்கள், நீங்கள் உங்கள் வாழ்வில் கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக தெய்வமாக ஏற்றுகொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அவர்கள் தேவனுக்கு முன்பாக இந்த எளிய ஜெபத்தை செய்தால் போதும்: “தேவனே, நீர் இருக்கிறீர் என்பதை நான் நம்புகிறேன் உம்மை நீர் இயேசுவின் மூலம் வெளிப்படுத்தி அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழ செய்தீர். மேலும் இப்போதே, எனக்கு தெரிந்த சிறந்த முறையில், உம்மை என் வாழ்வில் வரும்படி அழைக்கிறேன். என் பாவங்களை எனக்கு மன்னியும், என் வாழ்வை மாற்றிடும், நீர் விரும்புகிற நபராக என்னை மாற்றிடும். நான் இயேசுவின் சீஷனாக இருக்கவும் உம்மை பின்பற்றவும் விரும்புகிறேன். என் வாழ்வை மாற்றிடும். இப்போதே நீர் அப்படி செய்வீர் என நம்புகிறேன். ஆமென்.” நீங்க இந்த ஜெபத்தை ஏறேடுத்திருப்பீர்கள் என்றால், தேவன் அந்த ஜெபத்தை கேட்டிருக்கிறார், உங்கள் வாழ்வில் அவர் பிரவேசித்து, உங்களை முற்றிலுமாக மாற்றி அவர் விரும்புகிற நபராக உங்களை முழுவதும் மருரூபமாக்கிடுவார்.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே, இதை நீங்கள் இப்போதே செய்ய விரும்புகிறீர்களா, உங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து நினைக்கிறீர்களா? இதை கருத்தில் கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். அதற்கு இடையே எதையும் அனுமதித்திடாதிருங்கள்.

தேவன் உங்களோடு இடைபட்டு கொண்டிருந்தாள், தேவன் உங்கள் அருகாமையில் இருப்பதை நீங்கள் உணர்திட்டால், முழங்கால்படியிட்டு அந்த ஜெபத்தை ஏறேடுத்திடுங்கள் தேவன் உங்கள் வாழ்வில் செய்திடும் கிரியைகளை பாருங்கள்.

சரி, அடுத்த வாரம் தேவன் இருக்கிறார் என்பதற்கான ஆதாரங்களை தொடர்ந்து பார்க்க இருக்கிறோம். தேவன் இருக்கிறார் என்பதற்கு திடமான ஆதாரமாக இருப்பது இப்பிரபஞ்சத்தின் நிலை என்பதை பற்றி பில் பகிர்ந்திட இருக்கிறார். இதை தவற விட விரும்பிட மாட்டீர்கள். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.